தேர்ச்சி : 12 - இரண்டாம் குடியரசு யாப்பு - தேர்ச்சி மட்டம் (12.2)

வினா : இரண்டாம் குடியரசு யாப்பு நீதித்துறை பற்றி கருத்துரைக்குக.

தற்கால ஜனநாயக அரசுகளில் நீதித்துறை மிக முக்கியமானதாகும். நீதித்துறை உரிமைகளின் பாதுகாவலனாக அமைகின்றது. அது பிரஜைகளின் உரிமை அரசாங்கத்தினாலும் தனி நபர்களினாலும் மீறப்படாது பாதுகாக்கின்றது. ஒவ்வொரு குடிமகனும் தனது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள நீதித்துறையை நாடுகின்றான். நீதித்துறை சுதந்திரமாக இல்லாவிடில் குடிமக்கள் பாதுகாப்புத் தன்மையை இழந்துவிடுவர். எனவே நிதித்துறையை அமைக்கும் போது சுதந்திரமாக இயங்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

சட்டங்கள் நேர்மையற்ற வகையில் நிர்வகிக்கப்படின் அச்சட்டம் அதற்குரிய தன்மையை இழந்துவிடும். சட்டம் பலவீனமாக நடைமுறைப்படுத்தப்படுமாயின் ஒழுங்கற்ற தன்மை ஏற்படும். இதனை நிர்வகிக்கும் நீதித்துறை மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். இம்முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு தற்கால அரசுகள் நீதித்துறையை ஒழுங்கமைத்துள்ளன. முடியுமான அளவு அதன் செயற்பாடுகளையும் கடமைகளையும் ஏனைய துறைகளிலிருந்து பிரித்து வைத்திருக்கின்றது.

இவ்வடிப்படையில் இலங்கையின் நீதித்துறை அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்காக 2 ஆம் குடியரசு யாப்பில் பல நீதித்துறைத் தாபனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றினை,

1) மேல் நிலை நீதிமன்றங்கள்
2) கீழ் நிலை நீதிமன்றங்கள் என இரண்டாக பிரிக்கலாம்.

1978 இரண்டாம் குடியரசு யாப்பு மற்றும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதிமன்ற ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட நீதிமன்றக் கட்டமைப்புக்கள் வருமாறு,

1) உயர் நீதிமன்றம் (உச்ச நீதிமன்றம்) - Supreme Court
2) மேன்முறையீட்டு நீதிமன்றம் - Court of Appeal
3) மேல் நீதிமன்றம் - High Court
4) மாவட்ட நீதிமன்றம் - District Court
5) நீதவான் (மஜெஸ்ரேட்) நீதிமன்றம் - Magistrate Court
6) ஆரம்ப நீதிமன்றம் - Primary Court

இதில் முதல் மூன்றும் மேல் நிலை நீதிமன்றங்களாகவும் ஏனையவை கீழ் நிலை நீதிமன்றங்களாகவும் காணப்படுகின்றன. உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன ஆவணப்படுத்தலுக்கான சிரேஷ்ட நீதிமன்றங்களாகும். அரசியலமைப்பிற்கு ஏற்ப மக்களின் நீதிமன்ற அதிகாரங்களை நீதிமன்றத் தீர்ப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக பாராளுமன்றத்தால் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அமைவுச் சேர்க்கையும் அதன் உறுப்பினர்களான நீதியரசர்களை நியமிக்கும் முறையும்

119(1) ஆம் சரத்துப்படி உயர் நீதிமன்றம் பிரதம நீதியரசரையும் ஆறுக்குக் குறையாததும் பத்துக்குக் கூடாததுமான ஏனைய நீதியரசர்களையும் உறுப்பினராகக் கொண்டுள்ளது. இதன்படி உயர் நீதிமன்ற நீதியரசர்களின் குறைந்த பட்ச எண்ணிக்கை 7 ஆகவும் உயர்ந்த பட்ச எண்ணிக்கை 11 ஆகவும் இடம்பெறும் 2001 - 17 ஆம் யாப்புத் திருத்தத்திற்கு முன்னர் உயர் நீதிமன்றின் பிரதம நீதியரசரையும் ஏனைய நீதியரசர்களையும் ஜனாதிபதியே நியமித்தார். 17 ஆம் திருத்தத்தின் 41(ஈ) சரத்தின்படி பிரதம நீதியரசரையும் ஏனைய நீதியரசர்களையும் நியமிக்கும் போது ஜனாதிபதி தாம் நியமிப்பதற்காக கருதும் நபர்களின் பெயர்களை அரசியலமைப்புப் பேரவைக்குச் சிபாரிசு செய்ய வேண்டும். அரசியலமைப்புப் பேரவை அச்சிபாரிசுகளை அனுமதித்தால் மட்டுமே ஜனாதிபதி அந்நியமனங்களை மேற்கொள்ள முடியும். ஜனாதிபதி தாம் மேற்கொள்ளும் அந்நியமனங்கள் தொடர்பாக பிரதம நீதியரசரினதும் சட்டமா அதிபரினதும் கருத்துக்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென 41(இ) 4 ஆம் சரத்து குறிப்பிடுகிறது.

வினா : உயர் நீதிமன்றின் அதிகாரங்களும் பணிகளும் யாவை என ஆராய்க.

அரசியல் யாப்பின் 14 ஆம் அத்தியாயத்தின் 118 - 136 வரையுள்ள சரத்துக்கள் உயர் நீதிமன்றின் அதிகாரங்களையும் பணிகளையும் குறிப்பிடுகின்றன. 118 ஆம் சரத்துப்படி இலங்கைக் குடியரசின் உயர் நீதிமன்றமானது மீகமேலானதும் முடிவானதுமான பதிவேட்டு நீதிமன்றமாக இருப்பதுடன் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய பின்வரும் விடயங்களில் நியாயாதிக்கத்தினை பிரயோகிக்கன்றது.

அ) அரசியல் யாப்புக் கருமங்கள் தொடர்பான நியாயாதிக்கம்
ஆ) அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நியாயாதிக்கம்
இ) மேன்முறையீட்டுக்கான இறுதி நியாயாதிக்கம்
ஈ) ஆலோசனை நியாயாதிக்கம்
உ) தேர்தல் ஆட்சேபனை மனு வழக்குகள் தொடர்பான நியாயாதிக்கம்
ஊ) பாராளுமன்றின் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பான நியாயாதிக்கம்
எ) சட்டத்தின் மூலம் பாராளுமன்றம் உரித்தாக்கும் அல்லது ஆணையிட்டு வழங்கும் அல்லது வேறு கருமங்கள் தொடர்பான நியாயாதிக்கம்

1) **அரசியல் யாப்புபக் கருமங்கள் தொடர்பான நியாயாதிக்கம்**

இவ் அதிகாரத்தின்படி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும் மசோதாக்களின் யாப்புறு தன்மையை பரிசீலணை செய்யும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெறுகிறது. இது தற்கால நீதித்துறை பெறுகின்ற மிக முக்கிய அதிகாரமாகும். ஐக்கிய அமெரிக்க உயர் நீதிமன்றம் நீதிப்புனராய்வு பற்றிய கோட்பாட்டைப் பெறுகிறது. அங்கு யாப்பின் பாதுகாவலனாக உயர் நீதிமன்றம் கருதப்படுகிறது. பிரித்தானியாவில் உயர் நீதிமன்றம் இவ்வாறான அதிகாரத்தைப் பெறவில்லை. சொல்பரி யாப்பின் கீழ் உயர் நீதிமன்றம் இவ்வதிகாரத்தைப் பெற்றிருந்தது. 1ஆம் குடியரசு யாப்பின்படி உயர் நீதிமன்றம் இதனைப் பெறவில்லை. அதற்கென அங்கு யாப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டாலும் அதுவெறும் ஆலோசனை செய்யும் சபையாகவே கருதப்படுகிறது. 2ம் குடியரசு யாப்பில் 118ம் சரத்தில் ஆ பிரிவு "மசோதாக்களின் யாப்புறு தன்மையை பரிசீலணை செய்ய உயர் நீதிமன்றிற்கு அதிகாரம் வழங்கியுள்ளது. அதன் அதிகாரம் பாராளுமன்றச் சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையை முன் பரிசீலனை செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது. 12ம் சரத்தின் உப பிரிவுகள் இவ்வகை அதிகாரத்தை பூரணமாக ரத்துச் செய்யும் நோக்கோடு பாராளுமன்றம் கொண்டிருக்கும் மசோதாக்கள் சம்மந்தமாக முன்வைக்கப்படும் முரண்பாடுகளை விசாரிக்கும் அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது."

1 மசோதா மக்கள் அங்கீகாரத்தை பெறவேண்டுமா? என்ற பிரச்சினையை உயர் நீதிமன்றம் தீர்மானித்து மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பிற்கு விடவேண்டும் அல்லது தேவையில்லை என்ற தீர்மானத்தை வழங்கும் பிரஜைகள் அல்லது குழுக்கள் பிரதம நீதியரசரிடம் சமர்ப்பிக்கும் ஒரு மனுவின் மூலம் செயற்படுத்திக்

கொள்ளலாம். எனினும் 122ம் சரத்தின் மூலம் சமர்பிக்கப்படும் இவ் அவசர மசோதா சம்மந்தமான தீர்ப்புக்கள் 24 மணித்தியாலத்திற்குள் வழங்கப்பட வேண்டும் அல்லது ஜனாதிபதியால் நிச்சயிக்கப்படும் 3 நாட்களிற்குள் வழங்கப்பட வேண்டும். அதன்படி அரசியல் யாப்புக்கு ஒவ்வாத மசோதாக்கள் செல்லுபடியாகாது எனத் தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெறவில்லை.

1 சட்ட மூலம் 1 பகுதி யாப்புடன் முரண்படுகிறது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால் பாராளுமன்றம் அதனை நிறைவேற்ற வேண்டுமாயின் $\frac{2}{3}$ பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும் என்று யாப்பின் 123ம் சரத்தின் 7ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. எவ்வாறாயினும் 121, 122 ஆகிய ஏற்பாடுகளுக்கு இணங்க அன்றி எந்தவொரு சட்ட மூலமும் செல்லுபடியாகும் என்பதை தீர்மானிக்க அதிகாரம் வழங்கப்படவில்லை. இதன்படி யாப்பிற்கு பொருள் கூறும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2) **அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கான நியாயாதிக்கம்**

உயர் நீதிமன்றின் மற்றொரு கடமை, உரிமைகளையும், சுதந்திரங்களையும் பாதுகாப்பதாகும். தற்காலத்தில் உரிமைகளின் பாதுகாவலனாக உயர் நீதிமன்றம் உள்ளது. மக்கள் உரிமையை பாதுகாப்பதற்கு நீதித்துறையினை நாடுகின்றனர். 128ம் சரத்தில் இதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1 அடிப்படை உரிமை, மொழி உரிமை நிர்வாக நடவடிக்கை ஒன்றினால் மீறப்படுமாயின் அதனை பரிசீலித்து தீர்ப்பு வழங்க உயர் நீதிமன்றிற்கு நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ளது.

3) **மேன்முறையீட்டுக்கான இறுதி நியாயாதிக்கம்**

2ம் குடியரசு யாப்பின் கீழ் இறுதி மேன்முறையீட்டு அதிகாரம் உயர் நீதிமன்றத்திடம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தாலும் இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாக இது காணப்படுகிறது. வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் சம்மந்தமாகவும் சிவில் குற்றவியல் வழக்கு சம்மந்தமாகவும் இறுதி மேன்முறையீட்டு அதிகாரத்தை அது பெறுகிறது.

ஏதாவது 1 சட்டம் சம்மந்தமாக பிரச்சினை ஏற்பட்டால் அது சம்மந்தமாக ஆலோசனை வழங்கும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெறுகின்றது. இது பற்றி 129ம் சரத்து குறிப்பிடுகின்றது. இவ்வாறான பிரச்சினைகள் சம்மந்தமாக பரிசீலணை செய்வதற்கு நீதித்துறையிடம் சமர்ப்பிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றுள்ளார். 38ம் சரத்தின் 2ம் உப பிரிவின்படி ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்றம் முன்வைக்கும் குற்றப் பிரேரணை பரிசீலனை செய்யும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது.

ஒரு பாராளுமன்றின் அங்கத்தவர் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பவதன் காரணமாக பாராளமன்ற உறுப்புரிமை இழக்கப்படும் நிலை ஏற்படும் போது அவர் உயர் நீதிமன்றிடம் நியாயம் கோரி நிற்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் சம்மந்தப்பட்ட கட்சியினரின் தீர்மானத்தில் காணப்படும் செல்லுபடியாகும் தன்மையை உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும்.

4) **தேர்தல் ஆட்சேபனை மனு வழக்குகள் தொடர்பான நியாயாதிக்கம்**

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு சம்மந்தமாக மேன்முறையீட்டு அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது. ஜனாதிபதித் தெரிவு அல்லது பாராளுமன்ற அங்கத்தவரின் தெரிவு சம்மந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யலாம். ஜனாதிபதித் தெரிவு சம்மந்தமாக தெரிவிக்கப்படும் ஆட்சேபனை மனுவை விசாரிக்கும் ஆரம்ப அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது. உயர் நீதிமன்றம் இவ் ஆட்சேபனை மனுவை விசாரித்து சம்மந்தப்பட்ட தெரிவு செல்லுபடியாகும் அல்லது செல்லுபடியாகாது என்று குறிப்பிடும் அதிகாரத்தைப்

www.kedu.lk

பெற்றுள்ளது. அதேவேளை அத்தெரிவிற்கு எதிராக மீண்டும் தேர்தல் ஒன்றை நடாத்த வேண்டும் என்று தீர்ப்பளிப்பதற்கும் அல்லது அத்தேர்தலில் போட்டியிட்ட மற்றொரு அபேட்சகருக்கு அப்பதவியை வழங்குவவதற்கு அதிகாரம் உண்டு.

5) **பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பான நியாயாதிக்கம்**

பாராளுமன்ற அங்கத்தவர்களின் சிறப்புரிமை மீறப்படும் போது அது சம்மந்தமாக பரிசீலணை மேற்கொண்டு தண்டனை வழங்கும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றள்ளது. இது சம்மந்தமாக உயர் நீதிமன்றம் வழங்கும் தண்டனை கடுழிய அல்லது சாதாரண 2 வருட சிறைத் தண்டனை அல்லது 500/- அபராதம் அல்லது அவை இரண்டும்.

வினா : ஜனாதிபதியும் நீதித்துறையும் தொடர்புபடுத்தி விளக்குக.

அ) அரசியல் யாப்பின் 41(இ) சரத்தின்படி ஜனாதிபதி பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்பினைப் பெற்று நீதித்துறை சம்பந்தமாக பின்வரும் பதவி நியமனங்களை மேற்கொள்கின்றார்.

1) பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்றின் நீதியரசர்களும்
2) மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவரும் அதன் நீதி அரசர்களும்
3) நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள்
4) சட்டமா அதிபர்

ஆ) 107(4) ஆம் சரத்து - பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்றின் ஏனைய நீதியரசர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் மற்றும் ஏனைய நீதியரசர்கள் ஜனாதிபதியின் முன்னால் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னரே பதவி ஏற்பர்.

இ) 109(1) ஆம் சரத்து - உயர் நீதிமன்றில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதியரசர் ஒருவர் பாராளுமன்றில் சமூகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட $\frac{1}{2}$ பகுதியினரின் அனுமதியுடன் நிறைவேற்றப்படும் ஒரு பிரேரணை மூலம் பதவி விலக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு.

ஈ) 109(1) ஆம் சரத்து - உயர் நீதிமன்றில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றில் தற்காலிகமாக ஏற்படும் வெற்றிடங்களுக்கு 42(இ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதில் பணிபுரிதலின் படி நீதியரசர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு.

உ) 110(1) ஆம் சரத்து - உயர் நீதிமன்றில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதியரசர் ஒருவருக்கு வேறும் எழுதப்பட்ட ஒரு சட்டத்தின் கீழ் வேறும் ஒரு பணியை நிறைவேற்றுமாறு பணிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டும்.

ஊ) 110(3) ஆம் சரத்து - உயர் நீதிமன்றில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றில் நிரந்தர சேவையில் பதவி வகித்த ஒரு நீதியரசர் இளைப்பாறியதன் பின்னர் ஜனாதிபதியின் எழுத்து மூலமான சம்மதமின்றி சட்டத்தொழிலில் ஈடுபடலாகாது.

எ) 111(2) ஆம் சரத்து - ஜனாதிபதி மேல் நீதிமன்ற நீதியரசர்களை பாராளுமன்றப் பேரவையின் (18ம் திருத்தம்) அவதானிப்பைப் பெற்று நியமிக்கின்றார். அத்துடன் ஜனாதிபதி நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிபாரிசுடன் அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுவார். மேலும் அவர்கள் ஜனாதிபதியின் விடயக் கட்டுப்பாட்டிற்கும் உட்படுவர்.

ஏ) 34(1) ஆம் சரத்து - குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு. அதன்படி, பூரண மன்னிப்பை அல்லது சட்ட ரீதியான நிபந்தனையின் பேரிலான மன்னிப்பை வழங்குதல் வழங்கப்பட்ட தண்டனையை நடைமுறைப்படுத்தும் தினத்தை திகதி குறிப்பிடாது அல்லது குறிப்பிட்டு பிற்போடுதல். வழங்கப்பட்ட தண்டனைக்குப் பதிலாக தளர்த்தப்பட்ட தண்டனையை வழங்குதல். விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் தளர்த்துதல்.

www.ikeu.lk

ஐ) 129(1) ஆம் சரத்து - உயர் நீதிமன்றின் ஆலோசனையைப் பெறுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின்படி பதவி நீக்கம், பதவி நியமனம், மன்னிப்பு வழங்கல் தொடர்பாக ஜனாதிபதிக்கு பல நீதித்துறை சார் அதிகாரங்கள் உள்ளன எனத் தெரிகிறது. ஆனால் இவ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது நீதித்துறையின் மீது பாதிப்புச் செலுத்தும் அளவு வரையறுக்கப்பட்டுள்ளது.

வினா : ஜனாதிபதியும் மாகாண சபைகளும் 13ஆம் திருத்தத்தோடு தொடர்புபடுத்தி ஆராய்க.

- அரசியல் யாப்பின் 154(ஆ-2) ஆம் சரத்தின்படி மாகாண சபையின் பிரதான நிறைவேற்றாளரான ஆளுனரை ஜனாதிபதியே நியமிக்கின்றார். அச்சரத்து மேலும் குறிப்பிடுவதன்படி ஜனாதிபதியின் நன்மதிப்பை பெற்றிருக்கும் வரை ஆளுனர் பதவி வகிப்பார். எனினும் மாகாண சபையினால் $\frac{2}{3}$ பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் ஒரு பிரேரணையின் மூலம் ஆளுனரை நீக்குமாறு ஜனாதிபதியை வேண்டி நின்றால் குறிப்பிட்ட பதவிக் காலம் முடிவுறுவதற்கு முன்னர் ஆளுனரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு ஜனாதிபதி அதிகாரம் பெற்றுள்ளார்.

- ஆளுனர் பதவிக்கு நியமிக்கப்படும் நபர் ஜனாதிபதியின் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்ததன் பின்னரே பதவி ஏற்பார். (154, ஆ-6)

- மாகாண சபை சட்டத்தில் அல்லது 13ம் திருத்தச் சட்டத்தில் இடம்பெறும் விடயங்களைத் திருத்துவதற்காக மத்திய பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் ஒரு பிரேரணை தொடர்பாக மாகாண சபைகளின் கருத்தினை அறிவதற்காக முன்வைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு. (154, எ-2)

- மாகாண சபைகள் நிறைவேற்றும் நியதிச் சட்டங்கள் அரசியல் யாப்புக்கு முரணானது என்று மாகாண ஆளுனர் கருதினால் அவ்வாறான நியதிச் சட்டங்களை ஆளுனர் ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பதோடு ஜனாதிபதிக்கு அந்நியதிச் சட்டங்களை உயர் நீதிமன்றில் சமர்ப்பிப்பார். (154, ஏ-4)

- அத்தியாவசிய நிரம்பல்களையும் சேவைகளையும் கொண்டு நடத்துவதற்கும், யுத்தம் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி என்பவை இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் பொழுது ஜனாதிபதி பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தினை அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான ஏனைய சட்டங்கள் பிறப்பித்திருக்கும் பொழுது மாகாண ஆளுனருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கட்டளைகளை ஜனாதிபதி பிறப்பிப்பார். (154, ஐ-1)

- அவ்வாறு பிறப்பிக்கும் கட்டளைகளை ஆளுனரோ மாகாண சபையோ அசட்டை செய்திருக்கும் பொழுது அந்த மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தின் நிர்வாகத்தினைக் கொண்டு நடாத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. என்று ஜனாதிபதி பிரகடனம் செய்ய முடியும். (154, ஒ)

- ஒரு குறிப்பிட்ட மாகாணத்தின் நிர்வாகம் வீழ்ச்சி அடைந்துள்ளது என்று ஆளுனர் ஜனாதிபதிக்கு அறிவித்தால் அல்லது அவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி வேறு ஒரு வழியின் மூலம் அறிந்து கொண்டால் ஜனாதிபதி பிறப்பிக்கும் ஒரு பிரகடனத்தின் மூலம்.

  அ) ஜனாதிபதியினதும், மாகாண சபையினதும் அதிகாரங்களை முழுமையாக அல்லது பகுதியளவில் ஜனாதிபதி பொறுப்பேற்பார்.

  ஆ) மாகாண சபையின் அதிகாரங்களை மத்திய பாராளுமன்றம் நடைமுறைப்படுத்த வேண்டும். எனக் கட்டளை பிறப்பிக்கலாம்.

  இ) பிரகடனத்தின் நோக்கங்களை வெற்றிகரமாக அடைவதற்குப் பொருத்தமான வேறும் ஏற்பாடுகளையும் மேற்கொள்ளலாம். (154 - ஒ)

www.ikeou.lk

- மேற்குறிப்பிட்ட பிரகடனத்தை வெளியிட்டதுடன் பின்னர் அதில் உள்ளக்கப்பட்ட விடயங்களில் திருப்பி அடைவதற்குத் தேவையாயின் பிரகடனம் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 60 நாட்கள் முடிவுறுவதற்கு முன்னர் உயர் நீதிமன்றில் ஒரு நீதியரசரின் மூலம் ஒரு பரிசீலனையை மேற்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. *(154 - ஒ)*
- ஒரு குறிப்பிட்ட மாகாணத்திலோ அல்லது முழு இலங்கையிலோ நிதிப் பிரச்சினை உருவாகியுள்ளது என்று ஜனாதிபதி கருதினால் அது தொடர்பான ஒரு பிரகடத்தின் மூலம் ஜனாதிபதி அறிவித்தல் விடுக்க முடியும். அங்கு ஜனாதிபதி பிறப்பிக்கும் நடவடிக்கை ஏற்பாடுகளின்படி செயற்படுவதற்கு மாகாண சபையும் அதன் அதிகாரிகளும் கடமைபடுவர். *(154 - த)*
- *154, ஐ-1* உறுப்புரையின்படி நிதி ஆணைக்குழுவில் உத்தியோகப்பூர்வமாக நியமனம் பெறும் உறுப்பினர்களைத் தவிர ஏனைய உறுப்பினர்களை ஜனாதிபதியே நியமிப்பார்.

மேற் குறிப்பிடப்பட்டவை மாகாண சபைகள் தொடர்பாக அரசியல் யாப்பின் மூலம் ஜனாதிபதி பெற்றுள்ள அதிகாரங்களாகும். அவற்றை பரிசீனை செய்யும் போது மாகாண சபைகளை அரசியல் யாப்பின்படி செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி குறிப்பிடத்தக்க அதிகாரங்களைப் பெற்றுள்ளார் எனத் தெரிகின்றது.

www.lkedu.lk